# காரமடை நகராட்சி

**2023–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் (06.10.2023) 06–ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நகர்மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற நகர்மன்ற சாதாரணக் கூட்ட பொருள்களின் தீர்மானங்கள் விவரம்.**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | நகர்மன்ற பெருள் வரிசை எண் மற்றும் பொருள் விவரம் | தீர்மானம் எண் / தீர்மான விவரம் |
|---|---|---|
| 06.10.2023 | **பொருள்: 01**<br>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 15.09.2023 அன்று துவக்கிவைக்கப்பட்டு இந்நகராட்சிக்குட்பட்ட 27 வார்டு பகுதிகளிலுள்ள குடும்ப தலைவியர் மற்றும் பயனாளிகளுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் மூலம் மாதந்தோறும் ரூ.1000/– உரிமைத் தொகை ஒதுக்கீடு செய்து வழங்கப்பட்டுள்ளதற்கு இந்நகர்மன்றத்தின் மூலம் நன்றியினை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. | தீர்மானம் எண்.592 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 06.10.2023 | **பொருள்: 02**<br>காரமடை நகராட்சி ஆணையாளரது ஆகஸ்ட்–2023 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு :**<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>(ந.க.எண்.1879/2021/இ1) | தீர்மானம் எண்.593 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 06.10.2023 | **பொருள்: 03**<br>காரமடை நகராட்சி ஆணையாளரின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.1883/2022/எச்1, நாள்.30.12.2022–இன்படி திருவாளர்.சதர்ன் சாலிட்வேஸ்ட் மேனேஜ்மெண்ட் என்ற நிறுவனத்தின் மூலம் 53 எண்ணிக்கை டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களைக் கொண்டு நகரில் டெங்கு கொசுப்புழு ஒழிப்பு மற்றும் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி நிறுவனத்தின் பணி நீட்டிப்பு 27.09.2023 உடன் முடிவடைய உள்ளது. தற்போது பருவமழைக்காலம் என்பதாலும் காய்ச்சல் பரவாமல் தடுக்கவேண்டியுள்ளதாலும், கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களைக் கொண்டு பணியை தொடரவேண்டியுள்ளது. எனவே பொது சுகாதார அவசர அவசியம் கருதி | தீர்மானம் எண்.594 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | மேற்படி பணியினை தொடர்ந்து மேற்கொள்ள ஏதுவாக 01.10.2023 முதல் 31.12.2023 வரை பணி நீட்டிப்பு வழங்கவும் அதற்கான தோராய செலவினம் ரூ.34.00/– இலட்சத்தினை இவ்வலுவலக பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு :**<br>அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.1883/2022/எச்1) | |
| 06.10.2023 | **<u>பொருள்: 04</u>**<br>தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பு 2023–2024க்கான அறிவிப்பில் 28 நகராட்சிகளில் புதிய வாரச்சந்தைகள் மற்றும் தினசரி சந்தைகள் அமைத்தல் தொடர்பான அறிக்கை கோரப்பட்டதில், காரமடை நகராட்சியில் ஏற்கனவே வாரச்சந்தை 3.17 ஏக்கர் பரப்பில் செயல்பட்டு வருவதாலும், இதன் மூலம் நகராட்சிக்கு வருடத்திற்கு ரூ.44.62 இலட்சம் வருவாய் கிடைத்து வருவதாலும் மேற்கண்ட அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு புதியதாக வாரச்சந்தை தற்போது அமைக்க இயலாத நிலை உள்ளது. எனவே 2024–2025 ஆம் நிதியாண்டில் இந்நகராட்சிக்கு புதிய தினசரி/வாரச்சந்தை அமைக்க கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு :**<br>அனுமதி வழங்கலாம்<br>(ந.க.எண்.1298/2023/இ1) | தீர்மானம் எண்.595<br>சந்தை இடமாற்றம் செய்யக்கூடாது.<br>சந்தை மேம்பாடு செய்ய அரசுக்கு கருத்துரு அனுப்ப தீர்மானிக்கப்பட்டது. |
| 06.10.2023 | **<u>பொருள்: 05</u>**<br>அரசாணை (நிலை) எண்.116 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.07.12.2021ல் காரமடை பேரூராட்சியானது தரம் உயர்த்தப்பட்டு தற்போது நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. கோவை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) அவர்களின் ஆய்வுக் கூட்ட நடவடிக்கைகள் கடிதம் ந.க.எண்.329/2023/க்யு2, நாள்.08.05.2023ந் தேதிய கடிதத்தில் காரமடை நகராட்சி எல்லைக்குட்பட்ட ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளிகளை நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்வதாகவும், இனிவரும் காலங்களில் பள்ளி கட்டிடங்கள் மற்றும் சத்துணவு மையங்களில் ஏற்படும் சிறிய / பெரிய பழுதுகள் சரிசெய்யவும், புதிய கட்டிடங்கள் தேவைப்படும் இடங்களில் புதிய கட்டிடங்கள் கட்டவும், மின் இணைப்பு, குடிநீர் இணைப்பு வசதிகள் இல்லாத இடங்களில் ஏற்படுத்தி தரவும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளலாம் என தெரிவித்து காரமடை ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் அவர்களின் கடிதம் ந.க.எண்.1943/2023/அ2, நாள்.26.07.2023ல் தெரிவித்துள்ளார். | தீர்மானம் எண்.596<br>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | இதன்படி கீழ்கண்டவாறு உள்ள பள்ளிகளை நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.<br><br>**<u>துவக்கப் பள்ளிகள் :</u>**<br>1) ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, திம்மண்ணகவுண்டன் புதூர்.<br>2) ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, குளத்துப்பாளையம்.<br>3) ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, ஆயர்பாடி.<br>4) ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, பெரியதொட்டிபாளையம்.<br><br>**<u>நடுநிலைப் பள்ளிகள் :</u>**<br>1) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, காரமடை.<br>2) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, மங்கலக்கரைப்புதூர்.<br>3) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, குட்டையூர்.<br><br>எனவே மேற்கண்டவாறு உள்ள நான்கு துவக்கப் பள்ளிகள் மற்றும் மூன்று நடுநிலைப் பள்ளிகளை நகராட்சி பராமரிப்பிற்கு எடுத்துக் கொண்டதற்கு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு :**<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>(ந.க.எண்.1179/2023/எப்1) | |
| 06.10.2023 | **<u>பொருள்: 06</u>**<br>சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண்.W.P.No.12647/2023 மற்றும் WMP No.12435 & 12437 of 2023 சென்னை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கூடுதல் தலைமை செயலாளர் அவர்களின் நேர்முக கடிதம் எண்.5392/MC2/2023-3, நாள்.02.06.2023 சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர், அவர்களின் கடிதம் ந.க.எண்.16005/2022/TP2, நாள்.0706.2023 மற்றும் கோவை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நேர்முக கடிதம் எண்.CLR.REV.No.5889/2023/E4, நாள்.09.06.2023 ஆகியவற்றில் நகராட்சி பகுதிகளில் அனுமதியின்றி வைக்கப்பட்டுள்ள விளம்பரப் பலகைகள், விளம்பரப் பதாகைகள் போன்றவைகளை உடன் அகற்றி அது குறித்து உரிய அறிக்கை உடன் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டது. | தீர்மானம் எண்.597<br>அலுவலக குறிப்பு<br>அங்கீகரிக்கப்பட்டது. |

<table>
<tr>
<td></td>
<td>இது தொடர்பாக காரமடை நகராட்சி பகுதிகளில் உள்ள 11 எண்ணிக்கையிலான விளம்பரப் பலகைகள் அது தொடர்பான இரும்பு கம்பிகள் வெல்டிங் மிஷின் மூலம் முழுவதும் அகற்றப்பட்டு இது தொடர்பான அறிக்கை அரசு மற்றும் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பப்பட்டு தற்போது நகராட்சி பகுதியில் அனுமதியின்றி விளம்பரப் பலகைகள் ஏதும் இல்லாமல் உள்ளது.<br><br>எனவே மேற்கண்டவாறு நகராட்சி பகுதியில் உள்ள விளம்பரப் பலகைகள் அனைத்தும் அகற்றப்பட்டதற்கும் இனிவரும் காலங்களில் அனுமதியின்றி விளம்பரப் பலகைகள் (Hoardings) மற்றும் விளம்பரப் பதாகைகள் (Flex Banners) அமைக்கும்பட்சத்தில் அதனை அகற்றுவதற்கும் அதற்காகும் செலவினத் தொகை வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு :<br>அனுமதி வழங்கலாம்<br>(ந.க.எண்.2208/2023/எப்1)</td>
<td></td>
</tr>
<tr>
<td>06.10.2023</td>
<td><u>பொருள்: 07</u><br>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.9192/2022/SBM–1, நாள்.21.08.2023–ல் தூய்மை இந்தியா திட்டம் (U) 2.0 திட்டத்தில் காரமடை நகராட்சிக்கு திடக்கழிவு மேலாண்மை திட்ட பயன்பாட்டிற்கு கழிவு நீர் அகற்றும் வாகனம் ரூ.43.25 இலட்சம் மதிப்பீட்டில் வாங்க நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
<table>
<tr><td rowspan="2">வ. எண்</td><td colspan="7">கழிவு நீர் அகற்றும் வாகனம் விபரம்</td></tr>
<tr><td>கொள்ளளவு (லிட்)</td><td>எண்ணிக்கை</td><td>தொகை (ரூ.இலட்சம்)</td><td>மத்திய அரசு மான்யம் (ரூ.இலட்சம்)</td><td>மாநில அரசு மான்யம் (ரூ.இலட்சம்)</td><td>நகராட்சி பங்கு தொகை (ரூ.இலட்சம்)</td></tr>
<tr><td>1</td><td>6000</td><td>1</td><td>43.25</td><td>21.63</td><td>14.27</td><td>7.35</td></tr>
</table>
இப்பணிக்காக நகராட்சி பங்கு தொகை ரூ.7.35 இலட்சம் பொதுநிதியிலிருந்து செலவிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.</td>
<td>தீர்மானம் எண்.598<br>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>அலுவலக குறிப்பு :<br>அனுமதி வழங்கலாம்<br>(ந.க.எண்.1802/2022/இ1)</td>
<td></td>
</tr>
<tr>
<td>06.10.2023</td>
<td><u>பொருள்: 08</u><br>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 5990/2022/SBM2, நாள்.08.09.2023–இல் 2023–2024 ஆம் ஆண்டு தூய்மை இந்தியா திட்டம் (U) 2.0 திட்டத்தில் காரமடை நகராட்சிக்கு சமுதாய கழிப்பிடம் ஒன்று கட்ட ரூ.19.28 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு கீழ்காணும் விபரப்படி ரூ.27.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே திட்ட நிதி ஒதுக்கீடு செய்துள்ளது போக கூடுதலாக ஆகும் செலவுத் தொகை ரூ.8.22 இலட்சம் நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு (ரூ.இலட்சம்)</th><th>மானியத் தொகை (ரூ.இலட்சம்)</th><th>நகராட்சி பொது நிதி (ரூ.இலட்சம்)</th></tr>
<tr><td>1</td><td>காரமடை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17 சாஸ்திரி நகர் பகுதியில் சமுதாய கழிப்பிடம் கட்டுதல்.</td><td>27.50</td><td>19.28</td><td>8.22</td></tr>
</table>
அலுவலக குறிப்பு :<br>அனுமதி வழங்கலாம்<br>(ந.க.எண்.3342/2023/இ1)</td>
<td>தீர்மானம் எண்.599<br>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>06.10.2023</td>
<td><u>பொருள்: 09</u><br>ந.க.எண்.3346/எச்1/2023, நாள்.19.09.2023 தேதியிட்ட நகராட்சி நிர்வாக இயக்குநர், அவர்களிடமிருந்து பெறப்பட்ட கடிதத்தில் கழிவுநீர் அகற்றும் வாகனங்களை முறைப்படி செயல்படுத்தவும் புகார்களை பதிவு செய்யவும் ஏதுவாக 24 x 7 நேரமும் இயங்கும் உதவி மைய எண் "14420" உருவாக்கப்பட்டு உள்ளது. ஆனால் அதில் குறைந்த அளவே பதிவுகள் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மக்களிடம் உடனடியாக விழிப்புணர்வை ஏற்படுத்தி அழைப்புகளை அதிகப்படுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே "14420" என்ற கட்டணமில்லா அழைப்பு எண்ணை மக்களிடம் கொண்டு சேர்ப்பதற்கு 16,000 விழிப்புணர்வு நோட்டீஸ் மற்றும் விளம்பர பதாகைகள் தயார் செய்யவும், அதற்கான தோராய செலவினம் ரூ.50,000/–னை இவ்வலுவலக பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.</td>
<td>தீர்மானம் எண்.600<br>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | **அலுவலக குறிப்பு :**<br>அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.3346/2023/எச்1) | |
| 06.10.2023 | **<u>பொருள்: 10</u>**<br>காரமடை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தி வரும் கிருமிநாசினிகளான பிளீச்சிங் பவுடர் , நீர்த்த சுண்ணாம்பு தூள் மற்றும் பினாயில் ஆகியவற்றின் இருப்பு குறைவாக உள்ளது. தற்போது பருவமழை காலம் என்பதாலும், அருள்மிகு அரங்கநாதர் கோயில் புரட்டாசி மாத விஷேசம் என்பதாலும் உடனடியாக தேவைப்படுகிறது. எனவே பொது சுகாதார அவசர அவசியம் கருதியும், தொற்று நோய் பரவாமல் தடுக்கவும் 2023–24 ஆம் ஆண்டுக்கு தேவையான கிருமி நாசினிகளை வாங்கிடவும், அதற்கான செலவினம் ரூ.5.00/– இலட்சத்தினை இவ்வலுவலக பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு :**<br>அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.3392/2023/எச்1) | தீர்மானம் எண்.601<br>அலுவலக குறிப்பு<br>அங்கீகரிக்கப்பட்டது. |
| 06.10.2023 | **<u>பொருள்: 11</u>**<br>காரமடை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தி வரும் கொசுக்களை கட்டுப்படுத்தவும் மருந்துகளான டெமிபாஸ், பைரீத்திரம் மற்றும் பேசில்லஸ் துருஞ்சியாஸ் இருப்பு குறைவாக உள்ளது. தற்போது பருவமழைக்காலம் என்பதால் டெங்கு மற்றும் சிக்கன்குனியா போன்ற நோய்கள் பரவுவதற்கு வாய்ப்பு உள்ளது. மாண்புமிகு சுகாதரத்துறை செயலாளர் அவர்களின் கடிதத்தில் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்க தேவையான மருந்துகளை போதிய அளவு இருப்பு வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே 2023–24 ஆம் ஆண்டுக்கு தேவையான கொசுக்களை கட்டுப்படுத்தும் மருந்துகளை வாங்கிடவும், அதற்கான தோராய செலவினம் ரூ.10.00/– இலட்சத்தினை இவ்வலுவலக பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு :**<br>அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.3393/2023/எச்1) | தீர்மானம் எண்.602<br>அலுவலக குறிப்பு<br>அங்கீகரிக்கப்பட்டது. |
| 06.10.2023 | **<u>பொருள்: 12</u>**<br>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.17404/2022/எம்1, நாள்.29.05.2023–இன்படி முதலமைச்சரின் காலை உணவுத் | தீர்மானம் எண்.603<br>அலுவலக குறிப்பு<br>அங்கீகரிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | திட்டம்–1 முதல் 5 ஆம் வகுப்பு வரை இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளிலுள்ள 7 நகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவ/ மாணவியருக்கு அனைத்து பள்ளி வேலை நாட்களிலும் காலை உணவு வழங்கும் திட்டம் 25.08.2023 முதல் தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் ஒருங்கிணைப்பு மையத்தில் காலை உணவு தயாரிப்பதற்கு திருவாளர்.நைனா கேட்டரிங் சர்வீஸ், சமையல் கான்ட்ராக்டர், மேட்டுப்பாளையம் அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு காலை உணவு தயாரித்து வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி பள்ளி குழந்தைகளுக்கு காலை உணவு வழங்குவதற்கு ஓராண்டிற்கு ஆகும் தோராய செலவுத் தொகை ரூ.20.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு :**<br>அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.3157/2023/அ1) | |
| 06.10.2023 | **<u>பொருள் : 13</u>**<br>காரமடை நகராட்சிக்கு சொந்தமான தனிக்குடிநீர் திட்டத்தில் இயங்கி வரும் தேக்கம்பட்டி சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள குடிநீர் வடிகட்டுதலில் தற்போது பழுதுகள் ஏற்பட்டுள்ளதால் குடிநீர் அவசர அவசியம் கருதி ஆலோசகர் ஒருவரை நியமித்து மேற்படி பழுதுகளை போர்க்கால அடிப்படையில் சரிசெய்ய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு உடனடியாக பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | தீர்மானம் எண்.604<br>அலுவலக குறிப்பு<br>அங்கீகரிக்கப்பட்டது. |

**ஒம்/– உஷா வெங்கடேஷ்**
நகர்மன்ற தலைவர்,
காரமடை நகராட்சி.